(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate, Gingee.

CC.No. 173/2018

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 8 |
| Name (திரு/திருமதி) | : ஆறுமுகம் |
| Father's Name/ Husband's Name | : முனுசாமி |
| Village & Taluk | : மேல்மலையனூர் |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Age | : 59 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025**

3ம் எதிரி ஆஜர். 1, 2,4 மற்றும் 5ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேல்மலையனூர் கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 06.06.2016 அன்று 15.30 மணிக்கு நள்ளான் பிள்ளை பெற்றாள் கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.1(கிருஷ்ணமூர்த்தி) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 88/2016 இதச பிரிவுகள் 147, 324 506(ii)–ன் கீழ் மு.த.அ பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ–5–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு நான் அன்றைய தினமே மாலை 16.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரவி, பிச்சாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, உலகநாதன், இந்துமதி, பச்சைமுத்து, சக்கரவர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் 1ம் எதிரி குமரன் என்பவரை அன்றைய தினம் 17.15 மணிக்கு உளிம்பட்டு எதிரியின் நிலத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்பு இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.2( உலநாதன்) அ.சா.3 இந்துமதி, ஆகியோர்களுக்கு சிகிச்சை வழங்கிய செஞ்சீ அரசு ம.ம மருத்துவர் திரு.

தாகூர் என்பவரை விசாரித்து அ.சா.2( உலநாதன்) அ.சா.3 இந்துமதி, ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்றுகள் பெற்றேன். மேற்படி காயச்சான்றுகளில் மேற்குறிப்பிட்ட இருவருக்கும் ஏற்பட்ட காயமானது சொற்ப காயம் என கருத்து தெரிவித்து சான்று வழங்கினார்.

பின்பு நான் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 324 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என்பவர் அளித்த புகார் மனுவின் பேரில் தான் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அவர் அளித்த புகார் மனுவில் சம்பவ நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவ நாள் குறிப்பிடப்படாத பட்சத்தில் முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நாளை எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் அ.சா1 வாய்மொழியாக குறிப்பிட்டதன் பேரில் குறிப்பிட்டேன். அ.சா.1 என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவமானது 06.06.2016 அன்று காலை 07.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதே வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய CC.No.172/2018 என்ற வழக்கில் சம்பவம் எப்போது நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் தற்போது நினைவில் இல்லை.

2. அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என்பவரை CC.No.172/2018 என்ற வழக்கில் கடந்த 06.06.2016 அன்று 17.45 மணிக்கு கைது செய்தேன். அ.வ்வாறான சூழ்நிலையில் அன்றைய தினமே அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என்பவரை இவ்வழக்கு தொடர்பாக எவ்வாறு விசாரித்து வாக்குமூலம் பெற்றிருக்க இயலும் என்றால் அது தட்டச்சு பிழையாக இருக்கும். அ.சா.2 உலகநாதன் என்பவர் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டாரா அல்லது மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் அவர் செஞ்சி அரசு மருத்துவமனையில் மட்டும் தான் சிகிச்சை பெற்றுக்கொண்டார். அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என்பவர் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

3. அ.சா.1 குறுக்கு விசாரணையின்போது நான் கட்டாயப்படுத்தி புகார் எழுதி பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு. அவராகத்தான் புகார் அளித்தார். இந்த வழக்கு மற்றும் CC.No.172/2018 என்ற வழக்கிலும் நான் தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். Case in counter என்ற வழக்குகளில் யார் Aggressor என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி இரண்டு வழக்குகளிலும் யார் Aggressor என்றால்

கிருஷ்ணமூர்த்தி மற்றும் உலகநாதன் ஆகியோர்கள் Aggressor என்று தெரிய வந்தது. மேற்படி விவரத்தை நான் இரண்டு வழக்குகளிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரண்டு புகார்களில் ஒரு புகார் பொய் என தெரிந்த பட்சத்திலும் ஏன் ஒரு வழக்கை கைவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என்றால் இரு தரப்பினரும் அடித்துக்கொண்டதாக தெரிய வந்ததால் மேற்படி கைவிடும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

4. இந்த சம்பவத்தில் காயமடைந்து முதலில் மருத்துவமனைக்கு சென்றவர் யார் என்றால் இவ்வழக்கின் எதிரிகள் குமரன் தரப்பினர் ஆவார்கள். இரு தரப்பினர்களுக்கும் இடைய இருந்த முன் விரோதம் தொடர்பாக நான் முழுமையாக விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் அந்த விவரத்தை குறிப்பிட முன்வரவில்லை. எனவே அந்த விரவம் தெரியவில்லை. ஆயுதங்களை பயன்படுத்தி தாக்கியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் முதல் விசாரணையிலும் மற்றும் புகாரிலுல் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி ஆயுங்களை வைத்து தான் தாக்கினார்கள் என்பதையும், மேற்படி ஆயுதங்களையும் நான் கைப்பற்றினேனா என்றால் சம்பவ இடத்தில் அவைகள் இல்லை எனவே அவைகளை கைப்பற்ற இயலவில்லை.

5. அ.சா.1 காவல் நிலையம் வந்து புகார் மனு அளிப்பதற்கு முன்னதாகவே செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து அவர் சிகிச்சையில் இருப்பதாக காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்று அதன் அடிப்படையில் நான் அவரிடம் சென்று புகார் வாக்குமூலமும் பெற்றுவிட்டேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. காயமடைந்த அ.சா.2 எவ்வாறு மருத்துவமனைக்கு சென்றார் என்பதை விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1ன் தாயார் இந்துமதி என்பவரை இவ்வழக்கு தொடர்பாக நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன்.

6. மேற்படி இந்துமதி என்னுடைய விசாரணையின்போது அவரை 5 நபர்கள் முகத்தை துணியால் மூடி தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு அவர் முதல் விசாரணையில் குறிப்பிட்டிருப்பது அவர் வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளித்துள்ளதாக கருத வேண்டும் என்றால் சரிதான். அ.சா.2 அவரது முதல் விசாரணையில் எதிரிகள் ஐவரும் அவருக்கு பின்பக்கமாக வந்து துணியால் முகத்தை மூடி ஆயுதங்களை வைத்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் அவ்வாறான சங்கதியை என்னுடைய விசாரணையின்போது குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அவ்வாறு அவர் முதல் விசாரணையில் குறிப்பிட்டிருப்பது அவர் வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளித்துள்ளதாக கருத வேண்டும் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கின் பார்வை மகசர் என்னால் தயார் செய்யப்பட்டது. CC.No.172/2018 வழக்கின் பார்வை மகசரும் என்னால் தயார் செய்யப்பட்டது. CC.No.172/2018 என்ற வழக்கில் ஐந்து நபர்கள் மருத்துவனையில் சிகிச்சையிக்கு சேர்ந்தனர். இரு தரப்பிலும் வழக்கு பதிவு செய்துவிட்டேன் என்ற காரணத்தினால் தான் இவ்வழக்கின் எதிரிகள் மீதும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயமடைந்த நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நான் தான் விசாரணை செய்தேன். அவரிடம் ஆயுதங்களை காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இரு தரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்துவிட்டதால் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ன் தரப்பினர்கள் எதிரிகளின் வீடு புகுந்து அவர்களை அடித்துவிட்டு மீண்டும் ஓடும்போது தன்னிச்சையாக கீழே விழுந்து அதன் விளைவாகத்தான் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை வைத்து அவர் பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் அதனை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தொடர்பாக சம்பவ இடத்திற்கு அருகில் இருந்தவர்கள் சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டனர் என்றால் சரிதான். எதிரிகள் அவர்களின் கிராமத்தில் சிறுபாண்மையினர் என்றால் சரிதான். அ.சா.1 ன் குடும்பத்தினர் கிராமத்தில் பெரும்பாண்மையாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் சிறுபாண்மையினர் என்பதால் அ.சா.1.ன் தரப்பினர்களை அடிக்கும் அளவிற்கான தைரியம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.